# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 87/2017 ராமதாஸ் (பிசா1) தேதி: 04.06.2025**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பிசாஆ.6 ஆவணத்தில் ராமசுப்புவின் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல.பிசாஆ.6 ஆவணத்தில் ராமசுப்புவின் கையெழுத்தை போல் மோசடியா போட்டு பிசாஆ.6 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிசாஆ.6 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. பிசாஆ.1 வீட்டுவரி ரசீதுகள் எந்த கதவு எண் சொத்துக்கு ஏற்பட்டுள்ளது என்றால் கதவு எண்.2/302 ஆகும். அந்த ரசீதுகள் மாரியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிசாஆ.1 ரசீது எந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு போடப்பட்டது என்ற விவரம் அதில் துலங்கவில்லை என்றால் சரிதான். பிசாஆ.1 வீட்டின் அடிமனை எனது தாயாருக்கு சொந்தானது என்பதை காட்ட எனது தாயார் பெயரில் உள்ள பட்டாஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிசாஆ.1ல் வரிவிதிப்பு எண்.332,334 என உள்ளது என்றால் சரிதான். அந்த வரிவிதிப்பு ஊராட்சியில் யார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் எனது தாயார் மாரியம்மாள் பெயரில் உள்ளது.அவ்வாறு என் தாயார் பெயரில் வரிவிதிப்பு உள்ளதை காட்டும் ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேன். பிசாஆ.1ல் கண்ட வீடுகளை கட்டுவதற்கு முன்பு சத்திரப்பட்டி ஊராட்சியில் வாங்கிய ஒப்புதல் வரைபடம், கட்டிட அனுமதி உத்தரவு இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளது.அந்த மின்இணைப்பு யார்பெயரில் உள்ளது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என் தந்தை பெயரில் உள்ளது. அவ்வாறு அந்த மின்இணைப்பு என்பது என் தந்தை பெயரில் உள்ளது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வீடு கட்டுவதற்கு ரூ.40 லட்சம் செலவு செய்ததாக நான் கூறியுள்ள நிலையில் அதை காட்டுவதற்கு உரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் பிராது 3வது தபசில் வீடு பழைய கதவு எண்.13/6, புதிய கதவு எண். 86/8 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிசாஆ.1ல் கண்ட கதவு எண்ணும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள கதவு எண்ணும் வேறுவேறு என்றால் சரிதான். பிசாஆ.1ல் உள்ள சொத்திற்கும் பிராது 3ம் தபசில் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு அருகில் என் தந்தைக்கு சொந்தமான காலிநிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலிநிலத்தில் வீடுகட்ட ஊராட்சியில் அனுமதி வாங்கி பிரச்சனைக்குரிய பிராது 3ம் தபசில் வீட்டை வாதிகளின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள வீட்டிற்கு எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பிசாஆ.1ன் படி பிராது 3ம் தபசில்சொத்தில் நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல.பிசாஆ.2 ஆவணம் பிரதமர் காப்பீடு திட்டத்தில் நஷ்டஈடு வாங்குவதற்கு போடப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் முருகன் , மாரியம்மாள் பெயரில் ஆவணம் உள்ளது. முருகன் என்பவர் எனது அண்ணன் ஆவார். பிசாஆ.2ல் கண்ட ரசீதுகள் 2019ம் வருடம் முதல் 2023 ம்வருடம் வரை ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் வாதியை விசாரித்து இந்தவழக்கு நிலுவையின் போது வாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிசாஆ.3 வில்லங்கச்சான்றிதழலுக்கும் தாவாசொத்திற்கும் எந்தசம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிசாஆ.4 ஆவணம் 02.06.1973 தேதிய கிரைய ஆவணம் என்றால் சரிதான். பிசாஆ.4ல் கண்ட சொத்தை 1ம் பிரதிவாதி வரதராஜ், 2ம் பிரதிவாதி சங்கரப்பன், இறந்துபோன ராமசுப்பு மற்றும் அவரது தகப்பனார் குருசாமி நாயக்கர் சேர்ந்து குடும்ப கடனை அடைப்பதற்காக விற்பனை செய்யப்பட்ட சொத்தின் ஆவணம் என்றால் எனக்கு தெரியாது.பிசாஆ.5 நிலத்திற்குரிய தீர்வை ரசீது என்றாலும் அதில் 5 ரசீதுகள் உள்ளது என்றாலும் சரிதான். அதில் 2 ரசீதுகள் பட்டா எண்.449க்கு செலுத்தப்பட்டது என்றால் சரிதான். பட்டா எண்.449குரிய பட்டா யார்பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. பட்டா எண். 449க்கு போடப்பட்ட ரசீதுகளுக்கும் தாவாசொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.346கு மாரியம்மாள் பெயருக்கு வரிரசீது தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண்.

346 க்கு மாரியம்மாள் பெயரில் பட்டாஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பட்டா எண். 346 என்பது வாதியின் தகப்பனார் குருசாமி நாயக்கர் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. பிசாஆ.5 இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிசாஆ.5 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. பிசாஆ.7 சாகுபடி அடங்கல் பட்டா எண்.449, 346 க்கு உள்ளது என்றாலும் அதில் பட்டா எண்.449 சுந்தரமூர்த்தி பெயரிலும், பட்டாஎண்.346 வாதியின் தந்தை குருசாமி நாயக்கர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதனால் பிசாஆ.7 வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிசாஆ.7 இந்த வழக்கு நிலுவையின் போது போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் என் தந்தை 7ம் பிரதிவாதிக்கு பிராது 4 முதல் 7 இலக்கச்சொத்துக்கள் எதிரிடை அனுபவபாத்தியத்தின் மூலம் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த எதிரிடை அனுபவ பாத்தியம் சம்பந்தமாக எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.தாவாசொத்துக்கள் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து இறந்தபின்னர் அவரது வாரிசுகளான வாதிகள், 1 முதல் 6 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் நான் குறிப்பிடும் 10 ஏக்கர் 50 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என கூறுவது சரியல்ல என்றாலும், தாவாசொத்துக்கள் யாவும் என் தந்தை 7ம் பிரதிவாதிக்கோ அவரது மனைவி மாரியம்மாளுக்கோ அல்லது எனக்கோ எவ்வித பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றாலும் சரியல்ல. நான் பொய்க்கட்சி செய்து வருகிறோம் என்றாலும் பிராதுபடி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.